

இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழில் பேட்டையில் அமைய உள்ள டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் கட்டுமானப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 28ந் தேதி அடிக்கல் நாட்டுவதையொட்டி விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து சிப்காட் பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி. கிரண்ஸ்ருதி, தொழிலதிபர் ரமேஷ் , கழக சுற்றுச்சூழல் அணி மாநிலதுணை செயலாளர் ஆர். வினோத்காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நெமிலி ஒன்றியக் குழு தலைவர் வடிவேலு, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ரவீந்திரன், பெருமாள், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், ஜனார்த்தனன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். வினோத்,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் . சிவா,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானிவடிவேலு, ஒன்றிய பொருளாளர் பிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில்

# ரூ 2.57 கோடி செலவில் 5 மருத்துவமனைக் கட்டிடங்கள்!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – ஆர்.காந்தி திறந்து வைத்தனர்!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. – ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், செப்.26-

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டத்திற்குட்பட்ட பாரிவாக்கம் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.2.57 கோடி செலவில் 5 புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் த.பிரபு சங்கர் தலைமை தாங்கினார்.

முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாவட்ட சுகாதார அலுவலர்கள் பூந்தமல்லி ஜெ. பிரபாகரன், திருவள்ளூர் பி.பிரியா ராஜ் ஆகியோர் வரவேற்றனர்.

விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு 5 புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்தனர்.

அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியம் பேசியதாவது:-

திருவள்ளூர் மாவட்டத்தில், பூந்தமல்லி பாரிவாக்கத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பெருமாள்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் ஆவடி வட்டம், திருநின்றவூர் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் திருத்தணி வட்டம், அகூர் துணை சுகாதார நிலைய கட்டிடம், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஆவடி வட்டம், தாசர்புரம் துணை சுகாதார நிலைய கட்டிடம் என திருவள்ளூர் மாவட்டத்தில் முழுவதும் மொத்தம் ரூ.2.57 கோடி செலவில் 5 புதிய மருத்துவ கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைப்பதில் பெருமையாக கருதுகிறேன். மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.63.75 கோடி செலவில் 30 மருத்துவ கட்டிடங்கள்மற்றும் பல்வேறு திட்ட பணிகள் நடைப்பெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ.236.63 கோடி செலவில், 17 நகர்புற நல வாழ்வு மையங்கள், 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், 7 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிய கட்டிடம், செவிலியர் குடியிருப்பு, வட்டார பொது சுகாதார அலகு, அல்ட்ரா சவுண்ட்ஸ் கேன் கருவி, பூந்தமல்லி துணை செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் மாணவியர் விடுதி கட்டிடம், 3 அரசு மருத்துவமனையில் திருவொற்றியூர், திருத்தணி, ஆவடி கண் அறுவை அரங்கம், இரத்த வங்கி கட்டிடம், கூடுதல் கட்டிடம் மற்றும் சி.டி.ஸ் கேன் கருவி, திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில், புதிய மருத்துவமனை கட்டிடம், அறுவை சிகிச்சை அரங்கம், மகப்பேறு உயர் சார்பு தீவிர சிகிச்சை பிரிவு, 10கிலோ லிட்டர் ஹலோ ஆக்ஸிஜன் சேமிப்பு கலன் ஆகிய பல்வேறு வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் ரூ.64.95 கோடி செலவில் 31 புதிய மருத்துவ கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தியாவிலேயே ஒன்றிய அரசு ஊழியர்கள், மாநில அரசின் மருத்துவ சேவையை பயன்படுத்தி கொள்ள இணக்கம் தெரிவித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது தமிழ்நாட்டில் மட்டும்தான் .எங்களுடைய நோக்கம் கடைக்கோடி ஏழை எளிய மற்றும் நடுத்தர பொதுமக்கள் மருத்துவ சேவை சென்றடைய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். பின்னர் பெரு நிறுவன சுற்றுச்சூழல் சமூக பொறுப்பு நிதியினை மாவட்ட ஆட்சியரின் ஏற்பாட்டின் பேரில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு சமுதாய குடும்ப தத்தெடுப்பு திட்டத்தை மேம்படுத்தும் வகையில் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்தினையும், மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை உபகரணங்களும், காச நோய் துறைக்கு நிக்ஷய் மித்ரா திட்டத்தில் மூலம் 500 காச நோயாளிகளுக்கு ஊட்டச் சத்துக்காக 9 மாதங்களுக்கு ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் செல் கவுண்டர் வசதி ஏற்படுத்திட அரசு மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது.

மேலும் 9 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், 3 பயனாளிகளுக்கு கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் விலையில்லா கண் கண்ணாடிகளை அமைச்சர்கள் ஆர். காந்தி, மா.சுப்ரமணியன் ஆகியோர் வழங்கினார்.

தொடர்ந்து ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்படும் தேசிய தரச் சான்றிதழ் இந்த வருடம் திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. அவ்விருதினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வரிடம் வழங்கினார்.

முன்னதாக தமிழ்நாடு பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார்கள். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி. தேசிங்கு, ஒன்றிய குழு தலைவர் எம்.ஜெயக்குமார் துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், மாநகர நகர செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, மாவட்ட நிர்வாகிகள் விஜெ.சீனிவாசன், எம். முத்தமிழ் செல்வன், பொன் விமல், வி.குமார், துணைத் தலைவர் ராஜா அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை முதல்வர் டாக்டர் ஸரேவதி, சுகாதாரப் பணிகள் இணை இயக்குனர் டாக்டர் மீரா, உணவு பாது காப்பு நியமன அலுவலர் டாக்டர் ஜெகதீஷ் சந்திர போஸ், ஆவடி மாநகராட்சி நல அலுவலர் டாக்டர் வெங்கடேஷ், மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் (பொன்னேரி) லிவிங்ஸ்டன், துணை இயக்குனர்கள் (குடும்ப நலம்) டாக்டர் சேகர், (காசநோய்) டாக்டர் சங்கீதா, (தொழுநோய்) டாக்டர் வசந்தி வட்டாட்சியர் ரா.கோவிந்தராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் க.வெங்கடேஷ் மற்றும் மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் ஊராட்சி மன்ற தலைவர் வி.தணிகாசலம் அனைவருக்கும் நன்றி கூறினார்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 74 வது வட்டத்தில் பனந்தோப்பு காலனியில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை பள்ளி மாணவர்களுக்கு கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி கழக துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், டி.வெங்கடேசன், பி.ஜெகதீஷ், ஜே. சத்தியாமோகன், ஜி.வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதி கே எம் கார்டன் திவாகர், எ.வினோத் , தங்கராஜ், சசி, ஷாம் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



சென்னை மாநிலக் கல்லூரியில் 'தமிழும் பாவாணரும்' எனும் தலைப்பில் நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் தலைமை வகித்தார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.தாமரைக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். இக்கருத்தரங்கில் மலேசியத் தமிழ்நெறிக் கழகத் தலைவர் தமிழறிஞர் இரா.திருமாவளவனார் சிறப்புரையாற்றினார். இதில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் முனைவர் ஔவை ந.அருள் உள்ளிட்ட தமிழறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெறும்

# சிறப்பு வாக்காளர் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணிகளின் பொறுப்பாளர்கள் நியமனம்!

### மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



1-1-2025 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் – திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 823 பாகங்களுக்கும்,

வருகிற 2024 அக்டோபர் 29 முதல் நவம்பர் 28 வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் இடமாற்றம் குறித்து நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாமில் கீழ்க்கண்ட மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஆவடி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்புக் குழு

பொறுப்புக்குழு தலைவர் : சண் பிரகாஷ்

தொகுதி பார்வையாளர் : ஆர்.டி.ஆதிசேசன்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | ஆவடிகிழக்குபகுதி<br>திரு.பேபிசேகர் | மாவட்ட பொருளாளர்<br>திரு.நரேஷ்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.M.கார்த்திக் |
| 2 | ஆவடிமேற்குபகுதி<br>திரு.பொன்விஜயன் | மாவட்ட துணை செயலாளர்<br>திரு.ஜெயபால்<br>வழக்கறிஞர்<br>திரு.B. ரமேஷ் |
| 3 | ஆவடிவடக்குபகுதி<br>திரு.நாராயணபிரசாத் | மாவட்ட தொ.அணி அமைப்பாளர்<br>திரு.நாகூர்கனி<br>வழக்கறிஞர் அணி<br>திரு.A.அகஸ்டின் |
| 4 | ஆவடிதெற்குபகுதி<br>திரு.ராஜேந்திரன் | மாவட்ட துணை செயலாளர்<br>திரு.V.J. சீனிவாசன்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.வே. கார்த்திக் |
| 5 | திருவேற்காடுநகரம்<br>திரு.NEK மூர்த்தி | பொதுக் குழு உறுப்பினர்<br>திரு.எத்திராஜ்<br>வழக்கறிஞர்<br>திரு.D. ராஜ்குமார் |
| 6 | திருநின்றவூர்நகரம்<br>திரு.தி.வை.ரவி | மாவட்ட அவைத்தலைவர்<br>திரு.மா.ராஜி<br>திரு குமார்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.L. தேவராஜ் |
| 7 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம்<br>திரு.தேசிங்கு | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்<br>திரு.துர்காபிரசாத்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.பொன்புனிதவராஜ் |

**பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்பு குழு**

பொறுப்புக்குழு தலைவர் : திரு ஆ கிருஷ்ணாசாமி M.L.A.

தொகுதி பார்வையாளர் : மருத்துவர் திரு அருண் ஜெயகுமார்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம்<br>திரு.தேசிங்கு | மாநகர இளைஞரணி அமைப்பாளர்<br>திரு.துர்காபிரசாத்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.பொன்புனிதவராஜ் |
| 2 | பூவிருந்தவல்லிநகரம்<br>திரு.GR திருமலை | மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்<br>திரு.சுரேஷ்குமார்<br>வழக்கறிஞர் அணி<br>திரு.S. ராஜேந்திரன் |
| 3 | பூவிருந்தவல்லிகிழக்குஒன்றியம்<br>திரு.கமலேஷ் | திரு AJ பவுல்<br>திருமதி.காஞ்சனாசுதாகர்<br>வழக்கறிஞர்<br>திரு.N.P. மாரிமுத்து |
| 4 | திருவள்ளூர்கிழக்குஒன்றியம்<br>திரு.பிரேம்ஆனந்த் | திரு KJ ரமேஷ்<br>திரு.குமரேசன்<br>வழக்கறிஞர்<br>திரு.பா.முருகன் |
| 5 | திருவள்ளூர்மேற்குஒன்றியம்<br>திரு.ஜெயசீலன் | திரு.மா.ராஜி<br>வழக்கறிஞர்<br>திரு.S. செந்தில்குமார் |
| 6 | திருவள்ளூர்வடக்குஒன்றியம்<br>திரு.புஜ்ஜிராமகிருஷ்ணன் | திருமதி சங்கீதா ஸ்ரீநிவாசன்<br>திரு.மகாதேவன்<br>வழக்கறிஞர்<br>திரு.PKE நாகராஜ் |
| 7 | எல்லாபுரம்மத்தியஒன்றியம்<br>திரு.தங்கம்முரளி | திருமதி.காயத்ரிஸ்ரீதர்<br>வழக்கறிஞர்<br>திரு.K.J. அன்பு |
| 8 | திருமழிசைபேரூர்<br>திரு.தி.வே.முனுசாமி | பொது குழு உறுப்பினர்<br>திரு.விமல்வர்ஷன்<br>வழக்கறிஞர்<br>திரு.துரைபழனி |

மேற்கண்ட பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்களுடன் இணைந்து மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்கதீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் (திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ) எனது தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.கிருஷ்ணாசாமி எம்.எல்.ஏ., ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் மருத்துவர் அருண் உள்ளிட்டோர் இணைந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்களில் ஆய்வு மேற்கொள்வர் என்பதை தெரிவித்துத் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் :29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க/நீக்க / திருத்தம் செய்வதற்கு மற்றும் மனு கொடுக்க கால அவகாசம் :29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் : தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்கள்
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் :06.01.2025

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் – நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.